Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 14
இதழ் 103

யாழ்ப்பாணம் வைகாசி 10 ரபி; ஆகிர் 9 செவ்வாய்க்கிழமை (23-5-72)

25 MAY 1972

பச்சைச் சந்தனம்
மந்திரத்தினால்
அரைக்கப்பெற்ற நறுமணம் கமழும்
பச்சைச் சந்தனம்
எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்
ஆ. இராசையா
அன் சன்ஸ்
[மருந்துக்கடை]
69, கே கே எஸ் ரோட். யாழ்ப்பாணம்

“குடியரசின் வெற்றிக்கு சகல மக்களதும் ஆதரவு தேவை”

பதவிப்பிரமாணம் எடுத்தபின் பிரதமமந்திரி விடுத்த செய்தி

கொழும்பு, திங்கள்

சம்பிரதாயபூர்வமான நிகழ்ச்சிகளுடன் இலங்கை சோஷலிஸ குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

குடியரசின் முதலாவது பிரதம மந்திரியாகப் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டதும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நிகழ்த்திய சிற்றுரையில் புதிய குடியரசு வெற்றிகரமாகச் செயல்படுவதற்கு நாட்டிலுள்ள சகல மக்களினதும் ஆதரவையும், அனுதாபத்தையும், ஒத்துழைப்பையும் கோரினார்.

இன்று நண்பகல் இராணி மாளிகையிலிருந்து இலங்கையின் மகாதேசாதிபதியாக வெளிவந்த திரு. வில்லியம் கோபல்லவா அங்கு திருப்பிப் போகையில் புதிய குடியரசின் ஜனாதிபதி என்ற பெருமையுடன் சென்றார்.

கொழும்பு நவரங்கஹலாவில் குடியரசுத் தின நிகழ்ச்சிகள் ஆரம்பமாவதற்கு முன்னரே பிரமுகர்களும், மதத் தலைவர்கள் பலரும் மண்டபத்தில் கூடியிருந்தார்கள்.

நிகழ்ச்சிகள் ஆரம்பமானதும் அரசியல் நிர்ணயசபையின் தலைவர் திரு. ஸ்டான்லி திலகரத்ன புதிய அரசியல் திட்டம் இன்று காலையில் அரசியல் நிர்ணயசபையில் நிறைவேறியுள்ளதை அறிவித்தார். சட்டம் நிறைவேற ஒத்துழைத்த அங்கத்தவர்களுக்கு அவர் நன்றி தெரிவித்துப் பத்திரங்களில் கையெழுத்திட்டார்.

அதன் பின்னர் சரியாக 12-36 மணிக்குப் பிரதம மந்திரி இலங்கைக் குடியரசின் முதலாவது பிரதமமந்திரியாகப் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

இலங்கை சோஷலிஸக் குடியரசின் பிரதமராக இருந்து நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் விசுவாசத்துடன் பணியாற்றுவேன் என்று அவர் கூறினார்.

(5-ம் பக்கம் பார்க்க)

75 வீத மாணவர்கள் பாடசாலை செல்லவில்லை

யாழ்ப்பாணம் செவ்வாய்

குடியரசு தினமான நேற்று வடபகுதியில் பாடசாலைகளுக்கு மாணவர்கள் 75 வீதமானோர் செல்லவில்லை. கடைகள், வர்த்தக நிலையங்கள் அடைக்கப்பட்டிருந்தன. [illegible] போக்குவரத்து காலை 10 மணிக்குப் பிறகு நடைபெறவில்லை. பொலிஸ் பந்தோபஸ்துடன் பின்னர் சில வாகனங்களில் பஸ் போக்குவரத்து இடம் பெற்றது.

வீதிகளில் பழைய டயர்கள், தார் பீப்பாக்கள் போடப்பட்டு எரிக்கப்பட்டன. சம்பவங்களும் நடந்துள்ளன [illegible].

இன்னொரு இடத்தில் பொம்மை ஒன்றை கயிறு கட்டித் தூக்க முயன்ற இளைஞர் இருவர் கைது செய்யப்பட்டனர்.

பல இடங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. சில உள்ளூராட்சி மன்றங்களிலும் கறுப்புக் கொடிகள் பறந்தன.

சந்திக்குச்சந்தி சில இடங்களில் நின்ற வாலிபர் கூட்டத்தை கலைத்து ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்ய வேண்டிய நிலையும் ஏற்பட்டது. பொதுவாக நிலைமை அமைதியாகவே காணப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியாருக்குச் சொந்தமான உள்நாட்டு வெளிநாட்டு விற்பனை நிலையங்களும் யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவு சங்கக் கடைகளும் மக்கள் விற்பனைத் திணைக்களமும் திறக்கப்பட்டிருந்தன.

(5-ம் பக்கம் பார்க்க)

“பலாத்காரத்துக்கு இடமளிக்காதீர்”

யாழ்ப்பாணம், செவ்வாய்

தமிழர் கூட்டணியின் வேண்டுகோளின்படி 22-ந் திகதி ஹர்த்தாலைப் பூரண வெற்றியாக்க ஒத்துழைத்த தமிழ்பேசும் மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடைகள், தொழில் நிலையங்கள், பாடசாலைகள் எல்லாம் மூடப்பட்டு பூரண துக்கதினமாக அனுஷ்டிக்கப்பட்டது என்று தமிழர்கூட்டணியின் சார்பில் திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ஓர் அறிக்கையில் தெரிவித்தார்.

அமைதியான இந்த ஹர்த்தாலில் மக்களுக்கு ஆத்திரமூட்டக்கூடிய சில சம்பவங்களில் அரசாங்கம் இறங்கலாம். என்ன நடந்தாலும் கட்டுப்பாடாகவும், அமைதியாகவும் இருக்கும்படி தமிழ் பேசும்மக்கள் எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன் என்று கூறியுள்ள அவர் எதிர்வரும் தினங்களிலும் எவ்வித பலாத்காரத்துக்கும் இடமளிக்காது இருக்கும்படி எல்லா மக்களையும் விசேஷமாக மாணவர்களையும் வேண்டுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

திருமண அழைப்பு
தியாகமூர்த்தி — தர்மினி

நிகழும் பரிதாபிவருஷம் மேமாதம் 24-ந் திகதி புதன்கிழமை மாலை 7-45 க்கும் 8-45 க்குமிடையில் திருநிறை செல்வன் கந்தையா - தியாகமூர்த்தி (Executive Engineer, Territorial Civil Engineering Organisation, Nalanda) அவர்களுக்கும் திருநிறை செல்வி கனகராசா தர்மினி அவர்களுக்கும் நல்லூர் சிவன்கோவிலில் திருமணம் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்துள்ளார்கள்.

அச்சமயம், உறவினர்களையும் நண்பர்களையும் சமுகந்தந்து புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதிக்குமாறு வேண்டுகின்றோம். 25-5-72 வியாழக்கிழமை மாலை 5 மணிக்கும் 7 மணிக்குமிடையில் மணமகள் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
திரு மா கனகராசாவும்
பாரியாரும்

விலாசம்:
"குகவனம்"
15, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
3986

‘குழப்பங்கள் செய்வோருக்கு கருணைகாட்ட மாட்டோம்’

பொலிஸ் அதிபர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செவ்

வடபகுதியில் 40 பஸ்கள் வரை நேற்று சேதப்படுத்தப்பட்டுவிட்டன. கல்லெறிந்தும் மறித்தும் இந்த பஸ்கள் சேதப்படுத்தப்பட்டன. எமது சொத்துக்களை நாமே சேதத்துக்குள்ளாக்குவதால் நாம்தான் கஷ்டத்தை அனுபவிக்கவேண்டி ஏற்படும் என்பதை மறந்துவிடுகிறார்கள். இதேபோன்ற சம்பவங்கள் இனி நடப்பதற்கு அனுமதிக்கவே மாட்டோம். சம்பந்தப்படுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடபகுதி பொலிஸ் அதிபர் திரு சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

வடபகுதியில் அங்குமிங்குமாக நேற்று நடந்த சில சம்பவங்களைக் குறித்துக் குறிப்பிடுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

நேற்று நடந்த சம்பவங்கள் குறித்து பல தமிழ் எம்.பி.க்கள் தம்மிடம் வருத்தம் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

வழிக்குவழிநின்று பொது மக்களின் சொத்துக்களுக்கும் அவர்களுக்கும் கஷ்டத்தை ஏற்படுத்துபவர்கள் மீது பொலிசார் இனி கருணைகாட்ட மாட்டார்கள் என்றும் அவர் சொன்னார்.

அசம்பாவிதங்கள் சுமுக நிலைக்குத் திரும்பிவிட்டதாகவும் இன்று பாடசாலைகள் எல்லாம் வழக்கம்போல் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இன்று பாடசாலைக்குச் செல்ல வேண்டாமென்று மாணவர்களைத் தாம் வற்புறுத்த மாட்டோமென்று தம்மிடம் பல எம்.பி.க்கள் உறுதிமொழி அளித்ததாக பொலிஸ் அதிபர் தெரிவித்தார்.

10 பேர் வரை நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 4-15 மட்டும்
SWEET NIGHTS
(இன்ப இரவுகள்)

தினசரி 6-30, இரவு 9-45
எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா
நடித்த
தேடிவந்த மாப்பிள்ளை

பவானி சினிமா
மூளாய்
தினசரி 6-30 இரவு 9-30
ச ஞாயிறு 2-30
சிவாஜி - கே ஆர் விஜயா
நடித்த
ஊட்டி வரை உறவு

சாந்தி சங்கானை
தினசரி 6-30, 9-30
ஞாயிறு 10-00 2-30
ஜெமினி-சாவித்திரி
நடித்த
கொஞ்சும் சலங்கை

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-K Rவிஜயா
நடித்த
நிலவே நீ சாட்சி
குறிப்பு:- பாடசாலை மாணவர்கள் 100க்கு மேற்பட்ட குழுவுக்கு அரைக்கட்டணம். முகாமையாளருடன் தொடர்பு கொள்க. போன்: 7180

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
சிவாஜி— ஜெயலலிதா
நடித்த
தெய்வமகன்

MANOHARA
Jaffna
Daily 4-45. 7& 9-45 pm
Sat. Sundays 10-30
Giuliano Gemma
in
BLOW HOT,
BLOW COLD
(Color - adults only)

வின்ஸர் கடைசி வாரம்!
[யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
முத்துராமன் கே ஆர் விஜயா
நடித்த
கண்ணே பாப்பா

ராணி [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன் - ஜெயலலிதா
சுந்தரராஜன்—பாலாஜி
மற்றும்பலர் நடித்த
சுஜாதாவின் **ராஜா** (வர்ணச் சித்திரம்)

ராஜநாயகி — காங்கேசன்துறை
தினசரி 3 காட்சிகள்
V. S. T. பிலிம்ஸ்
குத்து விளக்கு

வெலிங்டன் (யாழ்.நகர்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 10-00
சனி, ஞாயிறு காலை 10-30

★ சிவாஜி
★ லக்ஷ்மி
★ முத்துராமன்
★ நிர்மலா
நம்பியார்
நாகேஷ்
சச்சு
மற்றும் பலர் நடித்த
தங்கைக்காக
இசை: விஸ்வநாதன் டைரக்ஷன்: யோகானந்த்

லிடோ (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
★ ராஜேஸ் கன்னா
★ ஆஷா பரேக்
நடித்த
கதி பதங்
கலர்)
இசை: ஆர். டி. பேர்மன்
டைரக்ஷன்; தயாரிப்பு: சக்தி சமந்தா

வரி விளம்பரம்

விற்பனைக்கு

ஆவர்பாடி இராசிப் புத்தகம் ஒரு இராசிக்கு ஒரு புத்தகம் 1-50 சித்திரை முதல் 12 மாசமும் உங்கள் சகல விபரமும் அடங்கிய உத்தரவாத பலன். ஆவர்பாடி சோதிட நிலையம் மாவிட்டபுரம் தெல்லிப்பழை. 4987

உன்னத நிலையிலுள்ள 24 ஸ்ரீ 7000 தொடர் மொறிஸ் லொறி விற்பனைக்கு உண்டு. நேரில் பார்வையிடலாம். 220, பிரதான வீதி, பருத்தித்துறை. 4162

தேவை

அனுபவமும் நம்பிக்கையுமுள்ள நூல் வகைகளும் வெள்ளிசாமான் வகைகளும் மற்றும் சப்பாத்து, சிலிப்பர் வகைகளும் வியாபாரம் தெரிந்த விற்பனையாளர்கள். நவீன மார்க்கட்டில் உள்ள கடையொன்றுக்கு தேவை. நேரில் வரவும். பொ. தம்பிப்பிள்ளை 23. மார்க்கட் யாழ்ப்பாணம். 4229

ஒய்வுபெற்ற அப்போதிக்கரி அல்லது தகுதிபெற்ற பார்மஸிஸ்டும் மருந்து விற்பனையாளரும் தேவை. ஆங்கில அறிவும் அனுபவமுடைய இருபாலாரும் 27-ம் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5019, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5019

காணவில்லை

கரவெட்டி மேற்கு, கன்பொல்லை வீதியைச் சேர்ந்த மாணிக்கம் தர்மராசா எனும் 15 வயதுச் சிறுவனைக் கடந்த ஒரு மாதகாலமாகக் காணவில்லை. இவர் சுமார் 4 அடி உயரமும் வலது கையில் காயம்பட்ட மறுவும் வடுவும் உண்டு. வலது காலில் பெருவிரலுக்கு அடுத்த விரல் கட்டை. பொதுநிறம் கடைசியாக மண்ணிறச் சாரமும் வெள்ளைச்சேட்டும் அணிந்திருந்தார். பக்க உச்சியுடன் தலைசீவியிருப்பார். இவரைக் கண்டு பிடிப்பவர் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அல்லது தம்பியன் மாணிக்கம், கன்பொல்லை வீதி கரவெட்டி என்ற விலாசத்துக்கு அறிவிக்கவும் உரிய சன்மானம் வழங்கப்படும். 5026

யாழ் தியேட்டர்
(காங்கேசன்துறை)
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெமினி செளகார் ஜானகி
நடித்த
காவியத் தலைவி
25, 26-5-72ல் 2-30க்கு விசேஷ மெற்னி உண்டு.

நியூ கலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
சனி ஞாயிறு பி ப 2-30
எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா
நம்பியார் நடித்த
என் அண்ணன்

REGAL (Jaffna)
Daily 5-15 & 7-15 p. m.
THE RISE & FALL
OF THE THIRD REICH

தினசரி 2-00 இரவு 9-45
ஏ. பி. நாகராஜன்
சரோஜா - நம்பியார்
நடித்த
மாங்கல்யம்

சத்தியப் பிரமாணம்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)
பேசுகையில் குறிப்பிட்டதாவது: உலகிலுள்ள சோஷலிச நாடுகள் எந்நிலையிலாவது மதத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஆனால் இலங்கையிலோ சோஷலிசவாதிகள் என்று கூறிக்கொண்டு இலங்கைநாட்டின் மதம் புத்தமதம் எனப் பிரகடனம் செய்து ஏனைய மதத்தவர்களின் உரிமையைத் தடுப்பதுதான் இங்குள்ள சோஷலிசமா? இன்று தமிழ் மக்களிடையே இரண்டு அணிகள்தான் உள்ளன. ஒன்று அரசாங்கத்தை ஆதரிப்பது மற்றது எதிர்ப்பது. எமது ஒற்றுமை முன்னணி நடவடிக்கைக்குழு எடுக்கும் நடவடிக்கைகள் மூலம் புதிய அரசியல் அமைப்பை எதிர்ப்போம்.

முன்னாள் ஊர்காவற்றுறை எம்.பி திரு வி. நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது: கடந்த காலங்களில் தமிழ்க் கட்சிகளிடை [illegible] தான் நாம் இந்த நிலைமைக்குள்ளாகியுள்ளோம். சுயாட்சி கோருவது தான் சிறந்தவழி. தமிழ் பிரதிநிதிகள் தமது பதவிகளைத் துறக்கவேண்டும். சுயாட்சி ஒன்றுதான் தமிழருக்கு நன்மை பயக்கும்".

உடுவில் எம்.பி திரு வி. தர்மலிங்கம் பேசுகையில் கூறியதாவது: நாம் எமது பதவிகளைப் பெரிதாகக் கொள்ளவில்லை. புதிய அரசியல் நிர்ணயசபையைப் பகிஷ்கரித்து வரும் நாம் புதிய அரசியல் திட்டத்தை அமுல் நடத்தும் சபையில் நாம் விசுவாசப் பிரமாணம் செய்யாதுவிட்டால் எமது பதவி பறிபோகும். மீண்டும் நடைபெறும் இடைத்தேர்தலில் நாம் வெற்றிபெற்றுச் சென்றால் சத்தியப்பிரமாணம் எடுக்க வேண்டும் அல்லவா! இப்படியாகவே எமது இன்றைய நிலைமை என்ன என்பதை எமது குழுவினரே முடிவு செய்யவேண்டும்.

"இந்தியா புதிய அரசியல் நிர்ணயசபை அமைக்கும்போது மூன்று ஆண்டுகள் மக்களின் ஆலோசனைகளைக் கேட்டுத் தீர்மானித்தது. சோவியத்நாடு 2400 அறிக்கைகளையும், மக்கள் கருத்துக்களையும் கேட்டு அரசியல் அமைப்பை ஏற்படுத்திக் கொண்டது. ஆனால் இலங்கையில் என்ன நடந்தது? அவசரகால நிலைமை, பத்திரிகை வாய்ப்பூட்டு, பேச்சுச் சுதந்திரமில்லை. வெளியில் இராணுவ ஆட்சிமுறை இல்லாவிட்டாலும் இந்நிலைமைக்குள் தான் குடியரசு அமைப்பு உதயமாகிறது. இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களை அழிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

முன்னாள் உப சபாநாயகர் திரு மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது: வெவ்வேறு அணிகளில் இருந்தவர்கள் இன்று ஒன்றுபட்டிருக்கிறோம். எமது இனத்தின் உரிமையை மீட்பதுடன், நாமும் சமமாக வாழவே விரும்புகிறோம் மானம்தான் பெரிது. எமது தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக வட்டுக்கோட்டை நல்லூர் தொகுதி எம். பிக்களை கட்சியில் இருந்து நீக்குமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் நாம் தான் பொறுத்திருமாறு வேண்டிக்கொண்டோம். பொறுத்ததன் முடிவு தான் இன்று எமக்குக் கிடைத்த [illegible].

கேள்விப் பத்திரம்

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சுமார் 5000 வெற்றுச் சாக்குகளும் சவனியா 8-25-20 ஒன்றும், மெச்சிலின் 8-25-20 ஆறு டயர்களும் விற்பனைக்குண்டு. கேள்விப் பத்திரப் படிவங்கள் ரூபா 50/- செலுத்திச் சங்கக் கந்தோரில் பெறலாம். விண்ணப்பங்கள் முடிவு திகதி 26-5-72 கேள்விகள் பதிவுத் தபால் மூலம் 31-5-72-ம் திகதிக்கு கிடைக்கக் கூடியதாக பொதுமுகாமையாளருக்கு அனுப்பி வைக்கவும்.

பொதுமுகாமையாளர்
4160

ஏலவிற்பனை

எதிர்வரும் 10-6-72 சனிக்கிழமை காலை 10-00 மணிவரை பூநகரி ப. நோ. கூ. ச. வளவில் கீழ்க்காணும் பொருட்கள் ஏலவிற்பனையில் விடப்படும்.

1. வெற்று றம் ஐம்பது 45 கலன்.
2. ஸ்பிறேயர் பம்புகள் எட்டு.
3. பவுடர் ஸ்பிறேயர் ஒன்று.
4. வெற்றுச் சாக்குகள் 2000.
5. இரும்புக் கட்டில் ஒன்று.
6. சைக்கிள் செயின்கவர் இரண்டு.
7. மற்றும் தளபாடப் பொருட்கள்.
8. பிடவைகள் [சிறு தையல்களுடன் பாவிக்கக் கூடியன]

மொத்தக் கேள்வியாயின் தொகையில் 25% உடனும் மிகுதி இரு நாட்களுள்ளும் கட்டிப் பொருட்கள் அகற்றப்படவேண்டும்.

இப்படிக்கு
பொதுமுகாமையாளர்
3995

புனருத்தாரணம்

ஆனைக்கோட்டை, செவ்.
கல்லுண்டாய் வயிரவர் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்வதில் ஆனைக்கோட்டை சைவ மக்கள் தர்மகர்த்தா ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செவ்.
தென்னிந்திய பரசமய கோளரிநாதர் ஆதீன ஸ்ரீமத் ஜெகத்குரு சிவானந்த முனீஸ்வரன் கைதடிவடக்கு ஸ்ரீசச்சிதானந்த ஆச்சிரமக் கட்டட நிதிக்காக நூற்றிரெண்டு ரூபா அன்பளித்துள்ளார்.

(கு வி ம)

மரண அறிவித்தல்

E. கந்தையா (மைலு)

கண்மணியின் கணவரும், பொன்னுத்துரை, விஜயரத்தினம், கனகம்மா, நேசம்மா, பூமணி, சிவபோகம் ஆகியவர்களின் தந்தையும், செல்லத்துரை (யாழ். மாநகரசபை உறுப்பினர், சமாதான நீதவான்) தம்பிமுத்து, ஆறுமுகம், திரவியம் ஆகியோரின் மாமனாரும், மகாலிங்கம், ராஜகுலேந்திரன் (மெடிக்கல் கல்லூரி), மகேந்திரராஜா ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 23-5-72 செவ்வாய்க்கிழமை 10 மணிக்கு தகனக்கிரியைக்காக கிலுவாண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
க. பொன்னுத்துரை
க. விஜயரத்தினம்
நா. த. செல்லத்துரை

.996

மாநில சுயாட்சி கோரிக்கைக்கு இந்திரா எதிர்ப்பு

இப்பொழுதுள்ள அதிகாரங்கள் நியாயமானவை என்கிறார்

சென்னை, மே 22

மாநில சுயாட்சி கோரிக்கை தவறான கருத்துக்களைத் தோற்றுவிப்பதாக இருக்கும். மக்களைத் திசை திருப்பிவிடவும் ஏதுவாகிவிடும். நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் ஊறுவிளைவிக்கக்கூடும் என்று பாரதப் பிரதமர் மந்திரி திருமதி இந்திரா காந்தி கூறியிருக்கிறார்.

மதுரையில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சி மாநாட்டில் பிரதமமந்திரி பேசினார்.

மாநிலங்களுக்கு இப்பொழுது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் நியாயமானவை. எல்லா மாநிலங்களுக்கும் நமது அரசியல் சாஸனம் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்திருக்கின்றது. இது இறுதியானதல்லதான். ஆனால் தற்சமயம் ஒன்றிணைந்துள்ளது என்றார் பிரதம மந்திரி.

ஒரு மாநிலம், மற்ற மாநிலங்களின் உதவி இன்றி முன்னேற முடியாது. ஒரு மாநிலம் தனது வளங்களை மற்ற மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளாமல் எப்படி முன்னேற முடியும் என்று பிரதமர் கேட்டார். தமிழ்நாடு எப்பொழுதுமே தொழில்வளம், கல்வி விஷயங்களில் முன்னின்று வந்துள்ளது. தமிழ்நாட்டுக்கு நான் அதிக சலுகைகள் செய்ததாகக் கடந்த காலத்தில் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறேன். காங்கிரஸ் அல்லாத மாநில ஆட்சிகளைக் கவிழ்ப்பதில் தான் மத்திய அரசு கண்ணாக இருந்து வருகின்றது என்று கூறப்படுவதில் உண்மையில்லை என்று அவர் சொன்னார்; உலகிலுள்ள பல ஜனநாயக நாடுகளிலும் இந்தியா மேலான சில கொள்கைகளைக் கடைப்பிடித்து வருகின்றது என்றார்.

மொழிப் பிரச்சினை பற்றி இந்தியப் பிரதமர் பேசுகையில் நாம் எந்த மொழியையும் எவர்மீதும் திணிக்க முற்படவில்லை. ஆனால் உண்மையான நிலைமைகளை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

முழு இந்தியாவும் ஒரே குடும்பமாகத் திகழ வேண்டும் அதுவே எமது முன்னேற்றத்துக்கு வழியாகும். ராணுவ ரீதியில் நாம் பலமாக இருப்பது அவசியமே ஆனால் மக்கள் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டியது முக்கியம் என்கிறார் திருமதி காந்தி.

கருணாநிதி கருத்து

இந்தியா பிளவுபடக்கூடாது என்பதில் திராவிட முன்னேற்றக்கழகம் வேறு எவருக்கும் இரண்டாவதாக இருக்கவில்லை. நாட்டில் ஒற்றுமை நிலவ வேண்டும் என்பதில் நாம் பிரதமந்திரியைப் போலவே அக்கறை கொண்டிருக்கிறோம் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி கூறினார். நேற்றிரவு சென்னையில் தி மு க கூட்டம் ஒன்றில் அவர் பேசினார்.

மாநில சுயாட்சியை தமிழ்நாட்டுக்கு மாத்திரம் நாம் கோரவில்லை. மற்ற மாநிலங்களுக்காகவும் தான் கோருகின்றோம் என்று திரு கருணாநிதி கூறினார்.

தமிழ்ப்பகுதி நுண்கலைக்கல்லூரி செயல்பட நடவடிக்கை

எடுக்குமாறு கல்வி அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்

அடுத்த வருடத்தில் நுண்கலைக் கல்லூரி தமிழ்ப்பகுதியில் செயல்படக் கூடியதாக நடவடிக்கை எடுக்குமாறு வடமாநில நாட்டியக்கலைஞர் சம்மேளனத்தின் செயலாளரும், கொழும்புத் துறை ஆசிரிய கலாசாலை விரிவுரையாளருமான திரு. வேல் ஆனந்தன் கல்வி அமைச்சர் டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்தைக் கோரியுள்ளார்.

கல்வி அமைச்சரிடம் இது சம்பந்தமாக கையளிக்கப்பட்ட மகஜர் வருமாறு:

நீண்டகாலமாக தமிழ்ப்பகுதிக் கலைஞர் மத்தியில் இருந்து வந்த பெரும் குறையாவது அவர்கள் தமது கலை விருத்தியை உள்நாட்டிலேயே பெற்றுக் கொள்ள முடியாமையேயாம். அத்துடன் அவர்களது கலைப்பட்டத்தை நிர்ணயிக்க முடியாதிருந்தது.

1970ம் ஆண்டு மக்கள் அரசு ஆட்சிக்கு வந்தபின் குறிப்பாகத் தாங்கள் கல்வி அமைச்சின் பொறுப்பை ஏற்றபின்பு எமது நாட்டியக்கலைஞர் சம்மேளனம் தங்களிடமும் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளிடமும் அடிக்கடி இதுபற்றி எடுத்துக் கூறியதை தாங்கள் அவசியப்படுத்தாமல் மிகக் குறுகிய காலத்திலேயே அதை நிறைவேற்றித் தரவும் முன்வந்ததை கண்டு நாம் பெருமகிழ்வு கொள்கிறோம்.

தாங்கள் மேற்கொண்ட வடபகுதிச் சுற்றுலாவில் பெரும்பான்மையான இடங்களில் தமிழ்ப்பகுதியில் நுண்கலைக்கல்லூரி பற்றி ஆணித்தரமாக வலியுறுத்திக் கூறியது எமக்கு மிகுந்த நம்பிக்கையை அளிக்கிறது. 1973 தை மாதத்திலாவது மேற்படி நுண்கலைக்கல்லூரி செயற்பட ஆரம்பிக்கக்கூடியதாக ஆக்கித்தருவீர்கள் என்று நம்புகிறோம். அத்துடன் நடனம், சங்கீதம், ஓவியம், சிற்பம் என்பவற்றை எல்லாம் போதிக்கும் நிறுவனமாக அது அமைய வேண்டுமென்று நாம் தங்களிடம் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

……

கலைஇலக்கிய நண்பர் கழகம்

கொழும்பு, திங்கள்

கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகத்தின் புதிய நிர்வாகிகள் வருமாறு:- தலைவர் காவலூர் தி நித்தியானந்தன், உப தலைவர் ஐ சாந்தன். பொதுச்செயலாளர் க இ சிவசுப்பிரமணியம் (நீலக்கந்தன்) துணைச் செயலாளர் கா இவராஜன் பொருளாளரும் பொதுமக்கள் தொடர்புச் செயலாளரும் தெ க போரன் கணக்காய்வாளர் ஒப்பிமான் இ சண்முகன்.

நிக்ஸன் மாஸ்கோ புறப்பட்டார்

வாஷிங்டன் மே 22

அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸன் இன்று மாஸ்கோ போய்ச் சேருகிறார். மாஸ்கோ செல்லும்வழியில் ஆஸ்திரியாவில் சுமார் 36 மணி நேரத்தைக் கழித்த பின்னர் அதிபர் நிக்ஸன் இன்று மாஸ்கோ புறப்பட்டார்.

கபார்கானை கொலைசெய்ய முயற்சி

புதுடில்லி மே 22

பாகிஸ்தானில் அவாமி லீக் தலைவர் கான் அப்துல்கபார்கானை ஒருகூட்டத்தினர் கொலைசெய்வதற்கு எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை.

அவரும் ஆதரவாளர்களும் சென்ற ஜீப்மீது ஒரு கூட்டத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் ஜீப்பிலிருந்த இருவர் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர்.

காவிரிநீர்ப்பிரச்சினை

29-ந் திகதி மாநாடு

புதுடில்லி, மே 22

காவேரி ஆற்றுநீரைப் பகிர்ந்துகொள்வது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட மாநில முதல்வர்களோடு இம்மாதம் 29-ந் திகதி ஆலோசனைகள் நடத்துவதற்கு மத்திய நீர்ப்பாசன மந்திரி டாக்டர் கே. எல். ராவ் தமிழ்நாடு முதல்வர் திரு கருணாநிதியை அழைத்திருக்கிறார். திரு கருணாநிதி இதற்கு இணக்கம் தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

……

சிரமதானமூலம் வீதிதிருத்தம்

கல்வியங்காடு, திங்கள்

தொல்புரம் வழக்கம்பரை, தொல்புரம் வாருசெட்டி பிரதானவீதி சிரமதானமூலம் திருத்தியமைக்கப்பட்டுவருகிறது. போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையிலிருந்த இவ்வீதியை தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தினரின் முயற்சியால் சிரமதானமூலம் திருத்தியமைக்கப்படுகிறது.

……

புதுவருட உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம், செவ்

உரப்புலம் ஆனைக்கோட்டை ஐக்கிய சனசமூக நிலையத்தின் மகாசபைக் கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு தே சிமியோன், உபதலைவர் திரு யோ அல்பிரட், இணைச் செயலாளர்கள் திரு அ தங்கத்துரை, திரு இ செல்வரத்தினம், பொருளாளர் திரு ஆர் எல் றஞ்சன், உப பொருளாளர்கள் திரு ம அந்தோனிப்பிள்ளை திரு ம யோகநாதன், கமிட்டி உறுப்பினர்கள் நால்வர் தெரிவு செய்யப்பட்டனர்.

3 மாடிக் கட்டிடத்தில் யாழ். பொலிஸ் நிலையம்

யாழ்ப்பாணம் செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் நவீன வசதிகளுடன் கூடிய மூன்று மாடிகள் கொண்ட பொலிஸ் நிலையமொன்று முப்பத்தைந்தரை லட்ச ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ளது. இக்கட்டிடம் பூர்த்தியாக சுமார் ஐந்து ஆண்டுகள் செல்லும் என்று தெரிகின்றது.

இக்கட்டிட வேலைகளை வடபகுதி கட்டிட திணைக்களம் பொறுப்பேற்றுள்ளது.

(ஈழ நி)

அபராதம்

வல்வெட்டித்துறை திங்கள்

சி. இரத்தினசிங்கம் என்பவர் மரத்தை வாகனத்தில் அதிக நீளத்துக்கு ஏற்றி வாகனத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறை நீதிபதி திரு ஜே ஜி ஆசிர்வாதம் 20 ரூபா அபராதம் விதித்தார்.

0 0 0

வல்வெட்டித்துறை திங்கள்

இரண்டு போத்தல் சாராயம் மேலதிகமாக உத்தரவில்லாமல் கொண்டுபோனதாக பருத்தித்துறை நீதிபதி திரு ஜே ஜி ஆசிர்வாதம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் பத்திநாதன் என்பவருக்கு 25 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

0 0 0

வல்வெட்டித்துறை, திங்கள்

டிராக்டர் ரெயிலரில் ஆட்களை ஏற்றிச் சென்றதாகத் தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறை நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசிர்வாதம் இரத்தினபிள்ளை அழகுதுரை என்பவருக்கு 15 ரூபா அபராதம் விதித்தார்.

0 0 0

வல்வெட்டித்துறை திங்கள்

சின்னத்துரை செகராசா என்பவர் வாகனம் ஓடிக் கொண்டிருக்கும்போது 1972ம் ஆண்டுக்குரிய லைசென்ஸ் இல்லாமலும், சாரதி லைசென்ஸ் காட்டாமலும் இருந்த குற்றத்தின் பேரில் பருத்தித்துறை நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசிர்வாதம் 45 ரூபா அபராதம் விதித்தார்.

மானிப்பாயில் சமய சொற்பொழிவு

யாழ்ப்பாணம் செவ்வாய்

மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கம் இராமலிங்கசுவாமிகள் மணிமன்ற ஆதரவுடன் இன்று சமய சொற்பொழிவொன்றை ஒழுங்கு செய்துள்ளது.

மானிப்பாய் தெற்கு வேலக்கைப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் இன்று மாலை நடைபெறும் இச்சொற்பொழிவில் வாழையடி வாழையென வந்த திருக்கூட்டம் என்னும் பொருள் பற்றி தெல்லிப்பழை அரசினர் கலைக்கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் திரு எஸ் ராமச்சந்திரன் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

……

அங்குரார்ப்பணம்

உடுப்பிட்டி, திங்கள்

பொலிகண்டியில் சமரபாகு முத்தமிழ்ச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. பண்டிதர் திரு க சிவத்தம்பி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு தெணியான், வித்துவான் சின்னத்தம்பி ஆகியோர் உட்பட வேறு பலரும் பேசினர்.

396வது சுவீப் சீட்டிழுப்பு

கொழும்பு திங்கள்

தேசிய லொத்தர் சபையின் 396-வது இலக்க சீட்டிழுப்பு இம்மாதம் 24ம் திகதி மாலை 5-15 க்கு கொள்ளுப்பிட்டியிலுள்ள தேசியலொத்தர் சபைக் காரியாலயத்தில் நடைபெறும்.

'நல்லவர்களின் சேவையே காரணம்'

மாவிட்டபுரம் திங்கள்

'கோப்பாய்ப் பகுதியில் கிரிமினல் குற்றங்கள் குறைவாயிருப்பதற்கு திரு ஆறுமுகம் போன்ற நல்லவர்களின் சேவை பெரிதும் உதவியாக உள்ளது.'

இவ்வாறு கோப்பாய் தெற்கு கிராமசேவையாளராக இருந்து இளைப்பாறிய திரு சி ஆறுமுகத்துக்கு அளிக்கப்பட்ட சேவைநலம் பாராட்டு விழாவில் பேசிய கோப்பாய் பொலிஸ் அதிபர் வ கிருஷ்ணசாமி கூறினார்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் திரு. சபாரத்தினம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

வலி கிழக்கு காரியாதிகாரி வ சந்தப்பிள்ளை பேசுகையில்: கோப்பாய்ப் பகுதியில் கடந்த 28 வருடங்களாக கிராம விதானையாகவும், கிராம சேவையாளராகவும் கடமையாற்றி மக்களதும் அரசாங்கத்தினதும் பாராட்டைப் பெற்றதுடன் உத்தியோகத்தர்களுக்கும் முன்மாதிரியாக விளங்கினார் என்றார்.

வலி கிழக்கு தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் திரு க இ குமாரசாமி பேசுகையில்: இப்பகுதி மக்கள் கூட்டுறவு இயக்கத்தால் அதிக நன்மை பெற்றுள்ளனர் திரு ஆறுமுகம் இப்பகுதியில் கடமையாற்றியபோது விவசாய அபிவிருத்திக்கு பல உதவிகளைச் செய்துகொடுத்துள்ளார்.

மற்றும் கோப்பாய் எம். பி. திரு சி கதிரவேலுப்பிள்ளை, கோப்பாய் கிராம சபைத் தலைவர் திரு. இ. பரமானந்தராசா உட்படப் பலர் பாராட்டுரை வழங்கினர்.

பரிசளிப்பு

உடுப்பிட்டி, திங்.

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா நிலைய சேவாச்சிரமப் பரிசளிப்பு விழா எதிர்வரும் 24-ம் திகதி சேவாச்சிரமத்தில் திருச்சி புலவிரதப் பகுதி வைத்தியசாலை டாக்டர் எம். வி நாராயணசுவாமி தலைமையில் நடைபெறவிருக்கிறது. சேவாச்சிரமப்பணியிலீடுபட்ட இருவர். சிறுமியர்களுக்கு திருச்சி பொன்மலை ஸ்ரீ சாரதா தேவி பஜனை மண்டலித் தலைவி திருமதி அகிலா நாராயணசுவாமி பரிசில்களை வழங்குவர்.

நடவடிக்கை குழு

யாழ்ப்பாணம், செவ்

நாளை காலை 9 மணிக்கு தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக்குழு யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் காங்கிரஸ் அலுவலகத்தில் கூடி மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து ஆராயும்.

'எதிர்ப்பவர் எதிர்க்கட்டும்; ஆதரிப்பவர் ஆதரிக்கட்டும்!

'இது ஜனநாயக உரிமை' என்கிறார் துரைப்பா

யாழ்ப்பாணம், செவ். "குடியரசு தினத்தை எதிர்க்க விரும்புபவர்கள் எதிர்க்கட்டும். அதை எவரும் தடைசெய்யக்கூடாது. அதேபோல் குடியரசு தினத்தை ஆதரிக்க விரும்புபவர்கள் அதனை ஆதரிக்கட்டும். அதையும் எவரும் தடைசெய்யக்கூடாது இது ஜனநாயக உரிமை."

ஸ்ரீலங்கா புதிய அரசியல் சட்டத்தை ஆதரித்து யாழ். நகர மண்டபத்தில் நேற்று மாலை நடந்த கூட்டத்தில், யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா மேற்கண்டவாறு கூறினார்.

திரு. துரையப்பா தலைமையுரையில் புதிய அரசியல் சட்டம் வந்தபின் நாட்டின் எந்த நீதிமன்றத்திலும் தமிழில் வழக்கு நடத்தலாம் என்று கூறினார். வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள நீதிமன்றங்களில் பதிவு ஏடுகள் தமிழிலும் இருக்குமென்றும் சொன்னார்.

திரு. ஏ. விஸ்வநாதன் பேசும்போது கூறியதாவது: புதிய அரசியல் திட்டத்தின் மூலம் தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டிருக்கிறது இவ்வளவு நாட்களும் நீதிமன்றங்களில் தனிச்சிங்களம் தான் இருந்து வந்தது. இந்த 65-ம் ஆண்டு முதல் 70-ம் ஆண்டுவரை தமிழரசும் ஆதரித்தனர். புதிய அரசியல் சட்டம் வந்தபின் நீதிமன்றங்களில் தமிழுக்குப்பின் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. 22-ம் விதியில் நீதிமன்றங்களில் சிங்களம், அல்லது தமிழ்தான் இடம் பெறும். இனிமேல் தமிழ்மக்கள் அரசாங்கத்துடன் தமிழ்மொழி மூலம் தொடர்புகொண்டு தமிழில் பதில் பெறலாம்.

புதிய அரசியல் சட்டத்தின் 11-ம் விதியில் 1-வது பிரிவில் இலங்கையின் சகல நீதிமன்றங்களிலும், பதிவு ஏடுகள் சிங்களத்தில் இருக்குமென்றும் தேசியசபையிலும் பதிவு ஏடுகளை தமிழிலும் வைக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது. தேசிய சபை வந்ததும் வடக்கு கிழக்கு நீதிமன்றங்களில் தமிழிலும் பதிவுகளைவைப்பதற்கான சட்டத்தை உருவாக்கும்.

இதில் 2ம் பிரிவில் டிசங்கள், விண்ணப்பங்கள் வடக்கு கிழக்கு நீதிமன்றங்களில் தமிழில் கொடுக்கலாம். பதிவு வசதிக்காக இவை சிங்களத்தில் மொழி பெயர்க்கப்படும். எந்தக் கோர்ட்டிலும் தமிழில் வாதிடலாம்.

4ம் பிரிவில் சிங்கள மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களுக்காக நீதவான், ஜூரிமார், வழக்காளி, எதிரி விரும்புமபட்சத்தில் தஸ்தாவேஜுகள் யாவும் தமிழில் மொழி பெயர்க்கப்படுவதோடு விசாரணையும் மொழி பெயர்க்கப்படும்.

இலங்கையில் எந்தப் பாகத்திலும் தமிழில் வழக்கு நடாத்தித் தமிழில் தீர்ப்புப் பெறலாம்.

5ம் பிரிவில் எந்த நீதிமன்றத்திலும், நீதவானின் அனுமதியுடன் தமிழில் வழக்கு நடத்தலாம். இது கொழும்பில் வாழும் சில வழக்கறிஞர்களுக்கு உதவியாக இருக்கும்.

6ம் பிரிவில் சிங்களம், தமிழ் தவிர்ந்த எந்த மொழியிலும் நீதவான் அனுமதியுடன் வழக்கு நடத்த வழி செய்யப்பட்டுள்ளது. பிரஞ்சு மொழியில்கூட நடத்த இடமிருக்கும்.

முஸ்லிம்கள் இந்நாட்டில் சகல மாகாணங்களிலும் வாழ்கிறார்கள். அவர்கள் பேசும் மொழி தமிழ். இலங்கையில் காதிக் கோடுகளின் நிர்வாக மொழி தமிழாகத் தானிருக்கும் அல்லது வழக்காளி விரும்பும் மொழியில் நடத்த இடமுண்டு.

நியமன எம். பி திரு. எம். சி. சுப்பிரமணியம், திரு. வி. பொன்னம்பலம், திரு. இராசா, திரு. கே. நாகராசா, திரு. வி. நடராசா உட்படப் பலர் பேசினர்கள்.

'1-ம் எதிரி மகளை தூக்கிச்செல்ல குளறிக்கொண்டு பின்னால் போனேன்'

பெண்கடத்து வழக்கில் சாட்சியம்

வல்வெட்டித்துறை, திங்கள் பெற்றோரின் பாதுகாப்பில் இருந்த இந்திராணி என்ற இளம் பெண்ணை நான்கு எதிரிகள் கடத்திச் சென்றதாக வல்வெட்டித்துறைப் பொலிசாரினால் தொடரப்பட்ட வழக்கு மீண்டும் பருத்தித்துறை நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கடத்திச் செல்லப்பட்ட இளம் பெண் இந்திராணியின் தாயார் தம்பிராசா [illegible] தனது சாட்சியத்தில் கூறியதாவது.

இந்திராணி எனது மகள். ஞானேந்திரன் எனது மகன். கடந்த 1971-ம் ஆண்டு ஜுன் மாதம் 2-ம் திகதி இரவு 10 மணியளவில் படுக்கைக்குச் சென்றோம். ஞானேஸ்வரன், பாலேந்திரன், தெய்வராணி, இந்திராணி தேவேந்திரன் ஆகியோர் எல்லாரும் வீட்டின் தலைவாசல் அறையில் படுத்திருந்தோம். 'பம் ட் பெட்டி'க்கு மேல் லாம்பு எரிந்துகொண்டிருந்தது. இரவு 12 மணியளவில் 'ஐயோ அம்மா' என்ற சத்தம் கேட்டு எழுந்தேன். அவ்வேளை 1-ம் எதிரி என் மகள் இந்திராணியை இரண்டு கைகளாலும் தூக்கிக்கொண்டு நிற்பதைக் கண்டேன். எனது தலைவாசல் இடுக்கில் அடைக்கப்பட்டு காவல்களுக்கு தட்டிபோடப்பட்டிருந்தது. சில நாட்களில் தட்டியை கட்டியிருப்பேன். சில நாளில் கட்டுவதில்லை. சம்பவதினம் கட்டப்படவில்லை. வாசைந்தரம் நான் குளற ஓடிவர ஏதோ ஒரு ஆயுதத்தினால் அடித்தார். அது இடது பக்க இடுப்பில் பட்டது. 3ம், 4ம் எதிரிகள் என்னை போகவிடாமல் தடுத்து நிறுத்தினார்கள். கட்டமாய் ஆட்கள் நிற்பதைக் கண்டேன். அடையாளம் கண்டுகொண்டது இந்த நாலு எதிரிகளையும்தான். ஞானேந்திரன் ஓடிப்போக அவனுக்கும் அடித்தார்கள். 3ம் எதிரிதான் அடித்தார். நான் அதிர்ச்சியில் இருந்ததினால் ஞானேந்திரனுக்கு எவ்விடத்தில் அந்த அடி விழுந்தது என்றுசொல்ல முடியவில்லை. 1ம் எதிரி மகளை தூக்கிச் செல்ல நான் பின்னால் குளறிக்கொண்டு போனேன். காரில் கொண்டுபோய் ஏற்றியதும் கார் உடனே புறப்பட்டுவிட்டது. அதுவரை அவளை ஏந்தியபடியேதான் சென்றனர். நான் பொலிசுக்கு அறிவித்தேன். பொலிசார் வந்தனர். அதன் பிறகு மூன்றும் நான் புதன்கிழமை வரை 1ம் எதிரியை நான் காணவில்லை. புதன்கிழமை பொலிஸ் ஸ்டேஷனில் கண்டேன்.

சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

கேள்வி: அவளை தூக்கிச் செல்லும் வேளையில் அவளைப் பிடித்து இழுக்க முற்பட்டேன்' இவ்விதம் பொலிசாருக்கு நீர் வாக்குமூலம் கொடுக்கவில்லையா?

பதில்: இல்லை.

கேள்வி: சம்பவதினத்துக்குமுன் 1ம் எதிரிக்கும் உமது மகளுக்கும் கடிதத் தொடர்பு இருந்ததல்லவா?

பதில்: இல்லை எனக்கு அப்படி ஒன்றும் தெரியாது

கேள்வி: இந்திராணி 1ம் எதிரியுடன் சிநேகிதமாக இருக்கவில்லையா?

பதில்: இல்லை

கேள்வி: மகளும் 1ம் எதிரியும் கதைத்துக்கொண்டிருந்ததை எப்போதாவது [சம்பவத்துக்குமுன்] கண்டீரா?

பதில்: நான் ஒருபோதும் காணவில்லை

கேள்வி: எனவே 1ம் எதிரிக்கும் மகளுக்கும் எவ்வித தொடர்பும் இருக்கவில்லை என்று சொல்லுகிறீரா?

பதில்: ஆம்

கேள்வி: 1ம் எதிரிக்கும் தனக்கும் கடிதத் தொடர்பு இருந்ததாக உமது மகள் இச்சாட்சிக் கூண்டில் சாட்சியம் அளித்தபோது சொல்லியிருக்கிறார்

பதில்: எனக்குத் தெரியாது

கேள்வி: காரில் ஏற்றமுன் இந்திராணி குளறியதைவிட காரில் ஏற்றிய பிறகு என்ன நடந்தது?

பதில்: கார் விரைந்துவிட்டது

நீதிபதி: கார் எவ்விடத்தில் நிறுத்தப்பட்டிருந்தது?

பதில்: சுமார் 175 யார் தூரத்தில்

நீதிபதி: உமது வீட்டுக்கு எப்பக்கத்தில்?

பதில்: தெற்குப் பக்கமாக

நீதிபதி: குளறிய சத்தம் கேட்டு அயலவர்கள் ஓடி வந்தார்களா?

பதில்: மகளை காரில் ஏற்றி கார் போன பிறகுதான் வந்தார்கள்

இத்துடன் விசாரணையை ஒத்திவைத்த நீதிபதி திரு. ஜே ஜீ ஆசீர்வாதம் மறு விசாரணையை ஆடி மாதம் 17ம் திகதிக்கு ஒத்திவைத்தார்

துர்நாற்றம்

அனுராதபுரம், திங்கள் அனுராதபுர பஸ் நிலையத்தில் அமைந்துள்ள ஒரு மலசலகூடம் தற்பொழுது துர்நாற்றத்துக்கும் பொதுமக்களின் அருவருப்புக்கும் உரிய இடமாகக் காட்சியளிக்கிறது நகரத்திலும் அமைக்கப்பட்ட இந்த மலசலகூடம் வடிவாய்க்காலோடு அமைந்துள்ளதால் கழிவுப்பொருள்கள் சேருமிடம் வடிகாலாகவே அமைந்திருந்து பொதுமக்கள் பெரிதும் அதிருப்திக்குள்ளாகியுள்ளனர்.

இன்றைய பலன்

வைகாசி மாதம் 10ம் திகதி
(23- 5- 1972)

மேஷம்: நம்பிக்கை மோசடி நடக்கும். நண்பர்களும் காலைவாரி விடுவர் தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத் தரும்

ரிஷபம்: நீண்டநாள் பிரச்சனையில் மூன்று சமரச முடிவு காணப்படும். மற்றவர்கள் மத்தியில் நல்ல பெயரை சம்பாதிப்பீர்.

மிதுனம்: உத்தியோக உயர்வுடன் உரிமையும் கிடைக்கும், உற்சாகமாக கடமையாற்றுவீர். உவகை சேரும்.

கடகம்: புத்திரரால் புகழுமுண்டு. புதினமும் கேட்பீர். பொதுமக்கள் ஆதரவும் கிடைக்கும்.

சிம்மம்: நெஞ்சமும் புண்ணாகி நெடுமூச்சும் வெளிக்கிளம்பும். இறை வழிபாடு அமைதியை ஏற்படுத்தலாம்.

கன்னி: பேராசையால் பெருநஷ்டமுண்டு. வழக்கு விவகாரங்கள் தலைதூக்கலாம் குறுக்குவழி மோசத்தை விளைவிக்கும்.

துலாம்: இருக்குமிடத்தில் ஆதரவு பெருகும். சிலருக்கு பொதுசனத் தலைமையும் கிடைக்கும்.

விருச்சிகம்: எதையும் முன்னணியில் நின்று செய்வதை இன்று பின்போடவும் பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு.

தனுசு: அவையோர் சம்பவங்கள் மனநிறைந்த மகிழ்ச்சியைத் தரும் எதையும் ஒழுங்கு முறையாக செய்வதில் திருப்தி அடைவீர்.

மகரம்: சூதாட்டத்தின் மூலம் பெருந்தொகையை இழக்க நேரிடலாம். நண்பர்களுடன் பகைத்துக் கொள்வீர்.

கும்பம்: திடீர் தாக்குதல் உங்களை திகைக்க வைக்கும் நினைப்பது ஒன்று நடப்பது வேறொன்றாக இருக்கும்.

மீனம்: தாம்பத்திய வாழ்க்கையில் தனிச்சிறப்புக் காணப்படும். பிரிந்தவர்கள் இணையும் சந்தர்ப்பமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

'பல கூ:சங்கங்களை ஸ்தாபித்தவர்'

மாவிட்டபுரம், திங்கள் 'எமது கிராம விவசாயிகளின் முன்னேற்றங்கருதி இப்பகுதியில் பல கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபித்துத் திறம்பட நடத்தியதோடமையாது. ஓர் தலைசிறந்த கல்லாசிரியராகவும் விளங்கினார். இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு இவைதம்பி உபாத்தியாயரின் சேவையைத் தொடர்ந்து மகனும் அதே வழியில் திறம்பட உழைத்துள்ளார். ஆசிரிய தொழிற்சங்க இயக்கத்தில் சென்ற பல வருடங்களாக உழைத்து ஆசிரியர்களின் உரிமைகள் பலவற்றைப் பெற்றுக் கொடுக்க உதவியுள்ளார். அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் பொதுக் காரியதரிசியாகவும் யாழ்ப்பாணத்தில் தலைசிறந்த கூட்டுறவு இயக்கத்தின் பிரதான நிர்வாகியாகவும் தொடர்ந்து கடமையாற்றி வருகிறார். இவரால் எமது கிராமம், பெருமையடைந்துள்ளது.

இவ்வாறு கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையின் தலைமையாசிரியராக இருந்து 39 வருட ஆசிரிய சேவையின்பின் இளைப்பாறிய திரு. க. இ. குமாரசாமிக்கு பாடசாலை மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் அளிக்கப்பட்ட சேவை நலம் பாராட்டுவிழாவின் போது தலைமைவகித்த வித்தியாலய அதிபர் திரு வே. சி. கந்தரலிங்கம் கூறினார்.

திருவாளர்கள் ச மார்க்கண்டு, செ நடராசா, சே க. சுப்பிரமணியம், குமாரசுவாமி. திருமதி அ நல்லையா, ம சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு பாராட்டுரை வழங்கினர்.

'தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை மகிழ்ச்சியானது'

உடுப்பிட்டி, திங்கள் "தமிழினத்திற்கு அழிவு ஏற்பட்டுவரும் இன்றைய சூழ்நிலையிலாவது சகல தமிழ்க்கட்சிகளும் ஒன்றுபட்டுச் செயற்பட முன்வந்துள்ளது மகிழ்ச்சிக்குரியது. ஒற்றுமைதான் எமக்குள்ள பலம் என்பதைபுணர்ந்து தமிழினம் தம் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கவேண்டும்."

மேற்கண்டவாறு நெல்லியடி தமிழின முன்னேற்றக் கழகக்கூட்டத்தில் பேசுகையில் திரு. தெல்லை ஐ. நடேசன் குறிப்பிட்டார். திரு. க. இலிங்கநாதன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. ……

கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம், செவ்: திருநெல்வேலி காளிகோவில் ஜனசமூக நிலையத்தின் ஆண்டுவிழாவையொட்டி நடைபெறும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இம்மாதம் 28-ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்துநாட்கள் நடைபெறும் போட்டி இறுதிநாள் அன்று வெற்றிபெறும் வீரர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். (ரா)

……

சேக்கிழார் குருபூசை

வல்வெட்டித்துறை, திங்கள் பலோலி ஆண்கள் மகாவித்தியாலயத்தில் சேக்கிழார் குருபூஜை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருப்பூங்குடி அன்புக்கடல் திரு. வி. சே. ஆறுமுகம் சேக்கிழார் பெருமைபற்றி வித்தியாலய மாணவர்களுக்கு கதாப்பிரசங்கம் செய்தார்.

ஆசிரியர் சங்க கூட்டம்

மாவிட்டபுரம், திங்கள் அகில இலங்கை தமிழ் ஆசிரியர்சங்கத்தின் 24-வது வருடாந்தக் கூட்டம் அடுத்த மாதம் 3-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் மற்றும் வெள்ளிவிழா ஆகியன பற்றி இக்கூட்டத்தின் போது ஆராயப்படும்.

சாட்சி பிணையில்

வல்வெட்டித்துறை, திங்கள் இன்னையா பாலசிங்கம் என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கு ஒன்றில் சாட்சிகளுள் ஒருவருக்கு முந்திய தவணைக்கு வரத் தவறியதற்காக பருத்தித்துறை நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் 200 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து ஜூலை மாதம் 20-ம் திகதிக்கு தவணையை ஒத்திவைத்தார்.

……

சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செவ்வாய் இன்று செவ்வாய்க்கிழமை வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலில் [illegible] ஆழ்வார் திரு. வே. க. மயில்வாகனம் 'ஆண்டாள் அருளிய ஆழியான் பெருமை' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

சத்தியப் பிரமாணம் எடுப்பதா? இல்லையா?

தமிழ்த் தலைவர்கள் கூட்டத்தில்

உடுவில் எம். பி. விளக்கம்

சுழிபுரம், திங்கள் எனது தொகுதியின் நலனை விட தமிழ்இனத்தின் நலனே மிகவும் பெரிதாகக் கருதுகின்றேன். ஆதலினால் தான் ஐக்கிய முன்னணி அரசாங்கத்திலிருந்து விலகிபுதிய அரசியல் அமைப்பை எதிர்த்து வருகின்றேன். இந்த நாட்டில் வாழும் மக்கள் சுபீட்சத்துடன் வாழ சோஷலிசம் தான் சிறந்ததெனக் கருதியதாலேயே இடதுசாரித்தோழர்களின் கூட்டை விரும்பினேன். ஆனால் சோஷலிசம், சோஷலிசம் என்று கூறியவர்கள், இந்த நாட்டில் வாழும் தமிழ் இனத்தை பூண்டோடு அழிக்கத் தீட்டிய திட்டமே புதிய அரசியல் அமைப்புத் திட்டம் என்பதை தெரிந்த பின்னர் நான் ஒரு சோஷலிசம் பேசவல்லனாக இருக்க விரும்பவில்லை. தமிழ் இனத்தின் நலனுக்காக எனது பதவியைத் துறந்து போராடவும் தயாராகவுள்ளேன்.

இவ்வாறு முன்னாள் வாலிப முன்னணியினரால் நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய கிளிநொச்சித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு வி. ஆனந்தசங்கரி கூறினார். திரு அ. அமிர்தலிங்கம் தலைமை வகித்தார்.

திரு அ. அமிர்தலிங்கம்

(2-ம் பக்கம் பார்க்க)

'அந்நியர் ஆட்சியிலிருந்து விடுதலைபெற்று விட்டோம்!''

யாழ்ப்பாணம், செவ். "சுமார் 450 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை அந்நியர் ஆட்சியிலிருந்து வந்தது. இன்றைக்கு விடுதலை பெற்று பூரண சுதந்திரத்துடன் இயங்குகின்றது. இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்கு இச்சுதந்திரம் நன்கு அடிகோலுவதாயமைந்துள்ளது."

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி வடபிரதேச அமைப்பாளர் திரு. அ. வைத்திலிங்கம் நேற்று இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி வடஇலங்கை காரியாலயத்தின் முன்னால் இலங்கைக் குடியரசு தின விழாவையொட்டி நடைபெற்ற கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழா ஆரம்பத்தில் திரு. அ. வைத்திலிங்கம் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்கொடியை ஏற்றி வைத்தார். அதையடுத்து திரு. எஸ். நடராசா தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். இக்கூட்டத்தில் திருவாளர்கள் எஸ். நடராசா, எஸ். விஜயானந்தன், ஆர். ஆர். பூபாலசிங்கம் ஆகியோர் உரையாற்றினார்கள்.

'பஸ்களில் கல்வீசப்பட்டது துக்ககரமானது'

யாழ்ப்பாணம், செவ். "அமைதியாக நடந்த ஹர்த்தாலில் சில இடங்களில் பஸ் வண்டிகள் மீது கல்எறியப்பட்டது துக்கப்படவேண்டிய விஷயமாகும் 22-ம் திகதி திங்கட்கிழமையோடு துக்கதினம் அனுஷ்டானம் முடிந்துவிட்டது. வியாபார தொழில் நிலையங்கள் இன்று செவ்வாய்க்கிழமை வழமைபோல் நடைபெறும். பாடசாலைகளுக்கு தாமாகவே பிள்ளைகள் 23, 24-ம் திகதிகளில் செல்லாது விடுமாறு நாம் கேட்டுள்ளோம். இதுவும் அமைதியாக நடைபெறவேண்டும் எவரையும் தடுக்க மற்றவர்கள் முயற்சிக்க வேண்டாம். என்று கேட்டுக்கொள்கிறோம் மாணவர்கள் வீதிகளில்திரியாது அமைதியாகத்தத்தம் இல்லங்களில் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்."

தமிழர் கூட்டணியின் சார்பில் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. ஏ. கதிரவேலுப்பிள்ளை விடுத்த அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இன்று கொண்டாடுவர்

யாழ்ப்பாணம்' செவ் வலிகாமம் வடக்கு காரியாதிகாரி பிரிவில் இன்று பிற்பகல் குடியரசுதின விழா கொண்டாடப்படவிருக்கிறது. பகுதிக் காரியாதிகாரி திரு பி. எஸ். மற்றிக் தலைமையில் நிகழும், இவ்விழாவை மேலதிககாரியாதிகாரி திரு க. குணராசா தேசியக்கொடியேற்றி ஆரம்பித்துவைப்பார் இசைநிகழ்ச்சிகளும் நாடகங்களும் இவ்விழாவில் இடம்பெறும்.

(5ம் கலத் தொடர்ச்சி)

இடையில் காட்டப்படும் சம்பள வித்தியாசம், நீதி, சமத்துவம் என்பனவற்றின் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும்.

'3ந் தர அதிபர் தெரிவுக்கான தெரிவில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குப் பெரும்பான்மையான இடங்கள் ஒதுக்கப்படவேண்டும்.

மரண அறிவித்தல்

கந்தையா தங்கம்மா

கொக்குவில் பாதிரி கோவிலடி ஒழுங்கை. காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கந்தையாவின் மனைவி தங்கம்மா காலமாகிவிட்டார். இவர் மலாயாவைச் சேர்ந்த (Bahau)கஃகோ வைத்தியப்பகுதி கந்தசாமி, யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் சந்தப்பிள்ளை, இளைப்பாறிய உணவுப் பகுதி ஸ்ரோக் கீப்பர் வ. கந்தையாவின் மனைவி இராசலக்ஷ்மி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் வ. மயில்வாகனத்தின் மனைவி கனகம்மா, கனகாம்பிகைக்குளம் குடியேற்றத்திட்டப் பொறுப்பாளர் இ. தியாகராசாவின் மனைவி கமலாதேவி, ஆகியோரின் தாயார் ஆவர் சவடி மயானத்தில் இன்று 23-5-72 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-30க்கு தகனக்கிரியை நடைபெறும்.

4163

குடியரசின்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

குடியரசின் முதலாவது ஜனாதிபதியாக திரு. வில்லியம் கோபல்லாவை நியமித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அதிகம் பேசவில்லையென்று தெரிவித்த பிரதம மந்திரி புதிய குடியரசுக்கு சகல மக்களதும் அன்பும், ஆதரவும், அனுதாபமும் கிடைக்க வேண்டுமென்றார். நாட்டின் சுபீட்சத்துக்கு தெய்வங்களின் ஆசீர்வாதத்தையும் பெற பிரார்த்திப்பதாகவும் அவர் சொன்னார்.

ஜனாதிபதி சத்தயப்பிரமாணம்

அதன் பின்னர் ஜனாதிபதியாக திரு வில்லியம் கோபல்லாவ பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டார். முதலாவது அரசப்பேரவையை இன்று காலை கூடும்படி அழைப்பு விடுவதாகவும் அவர் தெரிவித்தார். அதன் பின்னர் மண்டபத்தின் வெளியில் கொடி ஏற்றிவைக்கும் நிகழ்ச்சி இடம்பெற்றது. ஜனாதிபதி தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். அதைத் தொடர்ந்து ராணுவ அணிவகுப்பும் தேசியகீதம் இசைப்பும் இடம்பெற்றன.

ஜனாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ ராஜபவனியில் ஜனாதிபதிமாளிகைக்குச் சென்றார். அங்கு மகாராணியின் கொடி இறக்கப்பட்டு ஜனாதிபதியின் கொடி ஏற்றப்பட்டிருந்தது.

ஜனாதிபதி மாளிகையில் புதிய அமைச்சர்கள் விசுவாசப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்கள்.

வாழ்த்து

புதிய குடியரசை வாழ்த்தி வெளிநாட்டுத் தலைவர்கள் பலர் செய்திகள் அனுப்பி வைத்துள்ளனர்.

இந்திய ஜனாதிபதி திரு. வி. வி. கிரி, பிரதமர் திருமதி இந்திராகாந்தி, பிரிட்டிஷ் மகாராணியார், பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹீத் ஆகியோர்கள் வாழ்த்துக்கள் அனுப்பியுள்ளனர்.

107 அதிகப்படி வாக்குகள்

கொழும்பு, திங்கள் இன்று மாலையில் அரசியல் நிர்ணயசபை கடைசியாகக் கூடியபோது புதிய அரசியல் திட்டத்தை 107 வாக்குகள் பெரும்பான்மையுடன் ஏற்றுக்கொண்டது.

75 வீத

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

யாழ்ப்பாண அரசாங்க செயலகத்திலும், யாழ். மாநகரசபை மண்டபத்திலும் யாழ்ப்பாண விளையாட்டரங்கிலும் தேசியக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. (இ. நி.)

'50 வீத மாணவரை

தகுதி அடிப்படையிலும் தெரிவு செய்யவேண்டும்'

மாவிட்டபுரம், திங்கள் "பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களைச் சேர்க்கும் தரப்படுத்தல் திட்டத்தை அமுலாக்கும் அதே நேரத்தில் புத்தி நுட்பம் படைத்த பெருந் தொகையான மக்கள் நலன் அடைந்த நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்க வழிசெய்யுமுகமாக 50 வீதத்துக்குக் குறையாத மாணவர்களைத் தகுதியடிப்படையில் தெரிவுசெய்ய வேண்டும் என்று கோருகின்றோம்."

இவ்வாறு கோரும் மகஜரொன்றை வடபகுதி ஆசிரியர் சங்கங்களின் கூட்டுச் சபை வடபகுதிக்கு விஜயஞ்செய்த கல்வியமைச்சரிடம் சமர்ப்பித்தது. இம்மகஜரில் இடம்பெற்றுள்ள கோரிக்கைகள் வருமாறு:

ஒரு சர்வகலாசாலையின் கீழ் இயங்கும் பல்கலைக்கழக நிலையங்களைக்கொண்டஉயர்தரக் கல்விப் புனரமைப்பைக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளதை வரவேற்கின்றோம். கல்வி அமைச்சின் கொள்கையாகிய சமசந்தர்ப்பம் அளிக்கும் கல்வியை யாழ்ப்பாண மக்களுக்கு அளிக்கும் வகையில் இங்கு ஒரு பல்கலைக்கழக நியமத்தை நிறுவவேண்டும்.

கல்விச் சேவையை ஒன்றுபடுத்துமுகமாக எடுக்கப்பட்ட திட்டத்தை வரவேற்கும் நாம் அத்திட்டம் பயன் பொருந்தியதாக வெற்றி அடையவேண்டுமானால் சேவை மூப்புடன் தகுதியுள்ளவர்களுக்கும் செயல்திறன் உள்ளவர்களுக்கும் பதவி உயர்வு வழங்கவேண்டும். இத்திட்டத்தின் சார்பாகச் சேவை மூப்புள்ள ஒன்றுபடுத்தப்பட்ட கல்விச் சேவை 4ம் பிரிவுக்கு விண்ணப்பித்தவர்கள் அப்பதவி உயர்வு பெறுதற்கு 5ம் பிரிவுக்குத்தான் விண்ணப்பிக்கக்கூடியதாக இருக்கிறது. இந்தத் துக்ககரமான நிலைமை மாற்றவேண்டுமானால் அத்தகைய ஆசிரியர்கள் குறிப்பிட்ட இடைக்காலத்தில் 4ம் பிரிவுக்கு விண்ணப்பிக்கக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்த வேண்டும்.

ஒன்றுபடுத்தப்பட்ட சேவையில் 5ம் பிரிவில் தெரிவுசெய்யப்படும் பட்டதாரிகளுக்கும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கும்

[3-ம் கலம் பார்க்க]

உங்கள் காணிக்கு
உடன் பணம்!

விற்க விரும்பினால்
ரொக்கம் தருகிறோம்!

ரொக்கமாக உடன்பணம் கொடுத்துக்
காணியை வாங்குவோம். அல்லது ஏலத்தில்
அதை விற்றுத்தர ஏற்பாடு செய்வோம்.

எம்முடன் தொழில்செய்தால்
அதிசிறந்த பயன்களைப் பெறுவீர்கள்!
மிகப் பெறுமதியான பயன்கள்!

இலவசமாக விபரங்களைப் பெற
கீழ்க்காணும் கூப்பனை நீங்கள் அனுப்பவேண்டிய
விலாசம்:-

சேல்ஸ் அண்ட்
பினான்ஸ் லிமிட்டெட்
15, 1-ம் மாடி கபூர் கட்டிடம், - கொழும்பு
தொலைபேசி — 28018

கூப்பன்
எவ்வித நிபந்தனையும் இன்றி மேற்குறித்த
இலவச விபரங்களைத் தயவுசெய்து
அனுப்புங்கள்.

பெயர்: ....

விலாசம்: ....

....

மணிவாக்கு

நற்சிந்தையெனும் நறுமலர்சேர் நன்மரமே
கற்பக தாருவெனக் காண்.
உண்ணவே உண்ணத் தெவிட்டாத நல்லுணவு
அன்னவன் செல்லப்பன் அறி.
விண்ணவரும் தாமும் அறியாத வேதியன்
தன்னல நல்லூரான் நமக். — யோகசுவாமிகள்.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box 49 Jaffna; Telephone: 389

[illegible] பரிதாபி வருஷம் வைகாசி மாதம்
10-ந் திகதி (23-5-72)

சோக நினைவுகள்

நேற்றைய தினம் நாட்டில் மக்கள் ஆட்சி மலர்ந்தமகத்தான தினம். சரித்திரப்பிரசித்திபெற்ற கொழும்பு, கண்டி முதலிய நகரங்களில் நடந்த குதூகலமான கொண்டாட்டங்களையும் சிக்கனம் நிறைந்த சிறப்புச் சம்பவங்களையும் நம்மில் அநேகர் நேரில் கண்டும் வானொலியில் கேட்டுமிருக்கின்றோம். ஆயினும் இக்குடியரசுதினம் ஒளி நிறைந்த சந்திரனில் மறு இருப்பதை நினைவூட்டுகிறது.

நாட்டின் பலபகுதிகளில் இந்த வைபவத்தை ஒட்டி கொண்டாட்டங்களோ மகிழ்வூட்டும் நிகழ்ச்சிகளோ காணமுடியாதது ஒரு பெருங்குறை. மிக முக்கியமான மூன்று இனங்களில் ஒன்றான தமிழர்கள் பெருமளவிலோர் இதனை ஒரு களங்கம் நிறைந்த நாளாகக் கருதுவது நாட்டின் பொறுப்புணர்ச்சியுள்ள எந்தப் பிரஜைக்கும் மகிழ்ச்சியளிக்காது. இலங்கையின் சுதந்திர இயக்கத்தின் சரித்திரம் தெரிந்த எவருக்குமே சோக நினைவுகளையே இது ஏற்படுத்தும்.

அரை நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்த சந்ததியினர் ஆசிய நாடுகளின் சுதந்திரக் குமுறலையும் அதன் விளைவால் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகள் அந்நிய ஆதிக்கத்தைத் தகர்த்தெறிய உருவாக்கிய பல்வேறு இயக்கங்களைப் பற்றியும் நன்கறிவர். இன்றும் உயிரோடு இருக்கும் அவர்களில் பலர் இலங்கையின் சுதந்திரத்துக்கு தமிழ்மக்களின் தியாகமும் திறமையும் எத்தகையது என்பதை மறந்திருக்கமாட்டார்கள். நேற்று வெளியான ஓர் ஆங்கிலத் தினசரியின் விசேடபதிப்பில் தமிழருள் தலைசிறந்த ஒரு இத்தக்குடும்பம் ஈந்த மூன்று அருந்தவப் புதல்வர்களான சேர் முத்துக்குமாரசாமி, சேர் இராமநாதன், சேர் அருணாசலம் ஆகியவர்கள் நாட்டின் அரசியல் வாழ்வுக்கும் தேசிய வளர்ச்சிக்கும் ஆற்றிய தொண்டின் கதை வரையப்பட்டிருந்தது. இப்பெரியார்களின் தொண்டைப் பின்பற்றி சுதந்திர தாகம் கொண்ட தமிழ் வாலிபர் மிக முற்போக்கான சாதனைகளின் நடுவில் அரசர் பிறந்த தினக் கொண்டாட்டங்களையும், முதல் அரசாங்க சபைத் தேர்தலையும் பகிஷ்கரித்த சம்பவங்கள் அவர்கள் தேசிய ரீதியில் பூரண சுதந்திரத்துக்கு தங்களை அர்ப்பணித்த தியாகச்செயலாகவே சரித்திரம் கூறும்.

இந்த நாட்டுக்கு மகாத்மா காந்தி, பண்டித நேரு போன்ற இந்திய தேசிய வீரர்கள் விஜயம் செய்ய மூலகாரணமாயிருந்தவர்களும் தமிழ் வாலிபர்களே. இவ்வாலிபர்களுடன் இணைந்து நாடு முழுவதும் தேசிய இயக்கத்தை உருவாக்கிய தலைவர்களும் அவர்களைப் பின்பற்றிய வாலிபர்களும் வகுப்புவாதம் என்ற சொல்லையே கேட்டிருக்கமாட்டார்கள். காலகதியில் நாடு சுதந்திரமடைந்ததும் பல பிரச்சினைகள் உருவாயின. இந்த நாட்டுக்கு மட்டும் மொழிப் பிரச்சினை ஒரு புதுமையான பிரச்சினை என்று எவரும் கூறமுடியாது. ஆயினும் 25 வருட காலத்தில் நிலைமை சீர்திருந்தாமல் இந்த அரியசந்தர்ப்பமான குடியரசுக் கொண்டாட்டத்தில் நாட்டின் முன்னேற்றத்துக்கு முதற்படியான தேசிய ஒற்றுமை மங்கப்பட்டிருத்தல் அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல தேசியத்தலைவர்களும் நாட்டின் நலன் கருதும் ஒவ்வொரு பிரஜையும் கவலையுடன் சிந்திக்கவேண்டிய விஷயம்.

நேற்று மலர்ந்த மலர் தம்மை நாமே ஆளும் அரசு என்பதில் உண்மை உண்டு. ஆயினும் அந்த மலர் அன்று மலர்ந்து அன்று வாடுகிறதொன்றல்ல. என்றும் நறுமணங்கமழும் வாடாமலராயிருப்பதற்கு எல்லாச் சமூகங்களின் ஒத்துழைப்பும் நல்லெண்ணமும் அவசியம். மக்கள் உண்மையாகவே பரஸ்பரம் கருத்துப் பரிமாறிக்கொள்ளவும், நம்பிக்கையை வளர்த்துக்கொள்ளவும் வழிவகுக்கும் சாதனமே ஜனநாயகத்துக்கும் தனிமனித சுதந்திரத்துக்கும் ஆணிவேராய் அமையும். இத்தகைய ஜனநாயகத்தில் பல இனங்களும் கூடியளவு ஒற்றுமைப்பட்டு நாட்டை முற்போக்குப் பாதையில் கொண்டு செல்ல இயலும்.

நேற்று உருவான குடியரசின் அரசியல்திட்டம் எக்காலத்துக்கும் ஒரு முடிந்த முடிவென்று எண்ணி சோர்வடையவேண்டியதில்லை. நல்லறிவும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் வளர வளர குடியரசு பூரணப்பட்டு பலமடையுமென எதிர்பார்க்கலாம்.

பிளேட்டோ கண்ட குடியரசு

நாம் அமைத்துள்ள இந்தஅரசானது நான்கு முக்கிய பண்புகள் உடையதாயிருக்க வேண்டும் - ஞானம், தீரம், ஒழுக்கம், நீதி. ஆளுபவர்களுடைய அறிவாற்றலினால் ஞானமும், ஆட்சித் தலைவர்களுக்கிருக்கும் மனத்தைரியத்தின் மூலம் தீரமும், யார் ஆள வேண்டும் என்பதைப்பற்றி இவர்களுக்கும் ஆளப்படுவோருக்குமிடையில் உண்டான ஒற்றுமையின் மூலம் ஒழுக்கமும் இந்த அரசுக்கு கிடைக்கின்றது. ஒவ்வொருவரும் தத்தம் கடமையை செவ்வனே செய்து பிறருடைய விஷயங்களில் தலையிடாமல் இருப்பதனால் நீதியும் நிலவும்.

கிறிஸ்து பிறப்பதற்கு நானூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்த கிரேக்க மகாஞானியாகிய பிளேட்டோ என்பவர் தாம் எழுதிய 'குடியரசு' என்ற நூலில் செங்கோன்மை எப்படிப் பட்டதாயிருக்க வேண்டும் என்று மேலே கண்டவாறு பொழிப்பாக விளக்குகிறார்,

— வழிப்போக்கன் —

இந்தக்கருத்தை திருவள்ளுவரும் பின்வரும் குறள்களால் வலியுறுத்துகிறார்;

அஞ்சாமை ஈகை அறிவூக்
கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்
கியல்பு.
முறைசெய்து காப்பாற்
றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்
படும்.

நாட்டில் வசிப்பவர்கள் எல்லோரும் திருப்தியாகவும் சந்தோஷமாகவும் வாழவேண்டுமென்ற பெரும் நோக்கத்துடன் இந்த உலகில் மனிதன் எத்தனையோ விதமான ஆட்சிமுறைகளை இயற்றியுள்ளான். ஆதிகாலத்தில் பல நாடுகளில் முடியாட்சி எனப்படும் மன்னர்களின் ஆட்சி இருந்துவந்தது. முடிமன்னர் செங்கோல் தவறி கொடுங்கோல் ஓச்சியதால் ஆளப்படும் மக்கள் கொதித்தெழுந்து மன்னனைத் துரத்திவிட்டு தாமே அரசைக் கைப்பற்றிக்கொண்ட சம்பவங்கள் பல நாடுகளில் நிகழ்ந்திருக்கின்றன; ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா முதலிய நாடுகளில் இவ்விதம் நடந்திருக்கின்றன. முடியாட்சியை தொடர்ந்து ஜனநாயகம் என்ற பொதுப் பெயரில் பிரபுக்கள் ஆட்சி, ஒரு தனிக்கட்சியின் ஆட்சி, ஒரு குடும்பத்தின் ஆட்சி, இவையெல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. முற்காலத்து கொடுங்கோல் மன்னர்களைப்போல இக்காலத்தில் சர்வாதிகாரிகளும் வந்து போயிருக்கின்றனர். ஜனநாயகமுறையின் கீழ் பெரும்பான்மையான மக்களால் தெரிவுசெய்யப்படும் கட்சியே அரசபுரியும், இதுவும் ஒருவகை மக்கள் ஆட்சியே எனினும் சிறுபான்மையினர் முதலிய நாட்டு மக்கள் எல்லோருக்கும் சம உரிமை, சம அந்தஸ்து. சமநீதி என்ற உரிமை நலன்கள் இருக்கக் கூடியதான ஒரு இராமராஜ்யத்தை அமைக்க வேண்டுமென்று அரசியல் ஞானிகள் பலர் அவ்வப்போது கனவு கண்டுவந்திருக்கின்றனர்.

இன்று உலகிலுள்ள பெரும்பாலான நாடுகளில் குடியரசு எனப்படும் மக்கள் ஆட்சி நிலவுகின்றது. வாக்குரிமையுள்ள குடிமக்களின் அரசியல் நிர்வாகம் குடியரசு எனப்படும்.

கிறிஸ்து பிறப்பதற்கு 3000 வருடங்களுக்கு முன்பே அரசர்களை தெரிவு செய்யும் உரிமை குடிமக்களுக்கு இருந்ததாக இஸ்ரேல் சரித்திரத்தில் காணப்படுகிறது. கி. மு 700ம் ஆண்டில் கிரேக்க குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது. பின் 509இல் ரோமாபுரி குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது. பல விதமான ஊழல்கள் காரணமாக இவை சில ஆண்டுகளுக்குப் பின் மறைந்து விட்டன.

இன்று உலகிலுள்ள மிகப் பழைய குடியரசு ஸ்விட்ஸர்லாந்து எனலாம். இது 1291ல் நிறுவப்பட்டது. உலகத்து வல்லரசுகள் யாவும் இன்று குடியரசுகளாக விளங்குகின்றன. 1776 ஆண்டில் அமெரிக்கா பிரிட்டிஷ் ஆதிக்கத்தை களைந்து விட்டு குடியரசாக பிரகடனம் செய்தது. 1917ம் ஆண்டு ஜார் மன்னர்களின் ஆட்சியை முறியடித்து விட்டு ரஷ்யா குடியரசானது. 1950இல் சீன மக்கள் குடியரசு தோன்றியது. 1972ல் பிரான்சில் முடியாட்சி தகர்க்கப்பட்டு குடியரசு உண்டானது. பிரிட்டனிலும் பெயரளவுக்கு முடியாட்சி இருந்த போதிலும் 1666ம் ஆண்டிலிருந்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவகை குடியரசே இயங்கி வருகிறது. இந்தியாவும் பாகிஸ்தானும் 1947இல் சுதந்திர நாடுகளாகி 1956இல் குடியரசுகளாகின. உலகத்திலே மிகவும் சிறிய குடியரசான சிங்கப்பூர் 1965இல் ஏற்பட்டது.

மக்கள் எல்லோரும் சுபீட்சமாகவும் சந்தோசமாகவும் வாழக்கூடிய நீதியான ஓர் அரசபரிபாலனம் எப்படிப் பட்டதாய் இருக்க வேண்டுமென்று "குடியரசு" என்ற தமது நூலில் பிளேட்டோ மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்திருக்கிறார். அவரே சிறிது காலம் கிரேக்க அரசியலில் ஈடுபட்டு விட்டு அங்கு நிலவிய அநீதிகளையும் அக்கிரமங்களையும் கண்டு மனம் விரக்தி அடைந்தவர். அவர் அடைந்த ஏமாற்றத்தை பின்வரும் வசனங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

"அரசியல் சட்டங்களையும் பழக்க வழக்கங்களையும் அரசியல் வாதிகளையும் எவ்வளவுக்கெவ்வளவு கூர்மையாக கவனித்து ஆராய்ந்தேனோ அவ்வளவுக்கவ்வளவு முறையான அரசாங்கம் நடத்துவது கடினமானதென்ற எண்ணம் ஏற்பட்டது. விஸ்வாசமுள்ள நண்பர்களும் நம்பிக்கையான ஆதரவாளர்களும் இல்லாமல் ஒன்றுமே செய்ய முடியாது. நெறியொழுக்கம் தவறிய ஒரு சமுதாயத்தில் இப்படிப் பட்டவர்களை கண்டு பிடிப்பது கஷ்டம். அறமும் நீதியும் சட்டமும் நாளுக்கு நாள் குன்றிப்போவதைப் பார்க்க தலைசுற்றியது. அரசியல் முறைகளை சீர்திருத்துவதற்கு ஏற்ற தருணம்வருமென்று எதிர்பார்த்து ஏமாந்து போனேன். கடைசியில் உண்மையான தத்துவ ஞானம் இருந்தால் தான் தனிமனிதனையும் சமுதாயத்தையும் சீர்திருத்தலாமென்ற முடிவுக்கு வந்தேன். தத்துவ ஞானிகள் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றினால் அல்லது தெய்வச்செயலாக அரசியல் வாதிகள் எல்லோரும் தத்துவஞானிகளானாலன்றி மனித குலத்துக்கு விமோசனமே கிடையாதென்று தீர்மானித்தேன்".

யாழ். செயலகத்தில்

அரசாங்க அதிபர் தலைமையில் நடந்தகுடியரசு நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் செயலகத்தில் நேற்று நண்பகல் குடியரசுத்தின ஆரம்ப கொண்டாட்டங்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா தலைமையில் நடைபெற்றது.

அரசாங்க அதிபர் தேசியக்கொடியை ஏற்றிவைத்த பின் யாழ் மாவட்ட நீதிபதி வைத்திலிங்கம் குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார்.

குடியரசுப் பிரகடனம் முதலில் அரசாங்க அதிபர் விமல் அமரசேகராவால் சிங்களத்தில் வாசிக்கப்பட்ட பின்னர் மேலதிக அரசாங்க அதிபர் திரு ஏ ஏ ஜோசேப்பால் தமிழ்மொழியில் வாசிக்கப்பட்டது.

அரசாங்க அதிபர் முதலில் சிங்களமொழியிலும் பின்பு தமிழ்மொழியிலும் விசுவாசப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

இவ்வைபவத்தில் யாழ் மாவட்ட இணைப்பதிகாரி றெட்றிக்கோ, வடமாகாண பொலிஸ் அதிபர் ஆர் ஆர் சுந்தரலிங்கம், நீதிபதி கொலின் மெண்டிஸ். மேலதிக மாவட்ட நீதிபதி பரமகுரு ஆகியோரும் வக்கீல்களும், கிராமசேவையாளர்களும், பொதுமக்கள் சிலரும் அரசாங்க செயலக ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

[நிரு]

சிறுவனை ஏமாற்றிக் கடத்திச் செல்ல முயற்சி

தெய்வாதீனமாகத் தப்பினான்

உடுப்பிட்டி, திங்கள்.

இரவில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சிறுவனை ஏமாற்றிக் கடத்திச் செல்ல முயன்ற இனந்தெரியாத நபரொருவர் தனது முயற்சி தோல்வியடையவே ஓட்டம் பிடித்தார். வடஇந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற விழாவொன்றைப் பார்த்துவிட்டு வீடு திரும்புகையிலேயே சரவணையைச் சேர்ந்த தேவதாசன் கனகசபை என்னும் 15 வயதுச் சிறுவனுக்கே இவ்வனுபவம் ஏற்பட்டது.

இச்சிறுவன் சைக்கிளில் இரவு ஒன்பதரை மணியளவில் தனது நண்பர்களுடன் வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் புலோலி கிராமக் கோட்டுக்கண்மையில் இனந்தெரியாத நபரொருவர் தொண்டியோர் நடித்து வழியை மறித்ததாகவும் மற்றவர்கள் முன்னே செல்லவே பிரஸ்தாப சிறுவனிடம் அந்நபர் நெல்லியடி வரையும் வருகின்றேனெனக் கூறிச் சிறுவனிடமிருந்து சைக்கிளை வாங்கி முன்னுக்குச் சிறுவனை ஏற்றித் தானே சைக்கிளை ஓட்டியதாகவும் முன்னால் சென்றுகொண்டிருந்த சிறுவனோடு கூட வந்துகொண்டிருந்த நண்பர்களையும் முந்தி மந்திகைச் சந்தியைத்தாண்டி கல்வியங்காட்டுக் கோவில்போகும் வீதிக்குச் சைக்கிளை விடவே சிறுவன் பீதியடைந்ததாகவும் சிறுவன் பலத்தக் என்னைக் காப்பாற்றுங்கள் என்று அலறவே தெய்வாதீனமாக அவ்வழியாக வாலிபரொருவர் வரவே அந்நபர் சிறுவனோடு சைக்கிளைத் தள்ளிவிட்டு ஓட்டம் பிடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் சொந்தக்காரரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு மே மாதம் 23-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.